27th September 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) A total grant of Rs. 4,31,332 has been sanctioned so far to the Tamil Valarchi Kazhagam for the purpose.

(இ) One volume.

Village officers, etc. (Class I Panchayat areas)

* 1860 *Q.*—SRI M. SELVARAJ (on behalf of Sri S. M. **ANNAMALAI**) : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்கள் ஏற்பட்டிருக்கும் இடங்களில் முதல்தர பஞ்சாயத்துக்கள் உள்ள ஊர்களில் உள்ள கிராம அதிகாரிகளுக்கும் சிப்பந்திகளுக்கும் சம்பள உயர்வு தரப்பட்டுள்ளதா ?

(இ) இல்லையானால், காரணமென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) Yes, in the case of the village headman only, if he has been entrusted with the collection of panchayat revenue by the Revenue Divisional Officer.

(இ) No increase in pay has been granted to the village karnam and the talayari in Town Panchayats as they have not been asked to perform any additional functions on behalf of panchayat unions and panchayats.

SRI M. KALYANASUNDARAM : ஸார், இந்தக் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு அதிகத் தொகை கொடுக்க வேண்டுமென்று சொல்லுவதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று, அவர்கள் வசூலிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பதால், அதற்காக ஓரளவுக்கு சம்பளம் அதிகம் கொடுக்கப்படுகிறது. இன்னொன்று, பொதுவாகவே இந்தத் திட்டங்கள் பற்றி அவர்களுக்குக் கிராமங்களிலே அதிக வேலை ஏற்பட்டு இருக்கிறது என்ற காரணத்திற்காக அலவன்சு கொடுக்கப்படுகிறது. இந்த அலவன்சு டவுன் பஞ்சாயத்திலே இருக்கிறவர்களுக்கும் கொடுக்கப்படுகிறதா ? இல்லையா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : This question is with reference to panchayats and panchayat union councils and not with reference to general development which has arisen out of the Plan.

SRI M. KALYANASUNDARAM : கிளாஸ் I பஞ்சாயத்தைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : I am sorry. A separate question may be put.

Teachers in local board and private schools (salary remittances through money orders)

***1861 Q.—SRI V. K. KOTHANDARAMAN** : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஸ்தல ஸ்தாபனங்களிலும், தனியார் பாடசாலைகளிலும் வேலை செய்யும் ஆசிரியர்கள் சம்பளத்தை மணியார்டர் மூலமாகவே அனுப்ப உத்தேசமுண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The system of direct payment of salaries by money order to teachers in non-fee levying elementary schools under private management has been given up from **June 1960**.